**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.141/2022 தேதி-18.11.2025
(P.W.1) - ரீடாமாஜினி

முதல் விசாரணை தொடர்ச்சி

1) Will deed infavour of the plaintiff's husband dated 15.03.2018 is marked as Ex.A8.

2) Death Certificate of Thankam dated 25.04.2023 is marked as Ex.A9.

3) O.S.No. 400/2024 Judgment and decree (copy) is marked as Ex.A10.

4) Land Grabbing Appeal Notice dated 12.06.2023 is marked as Ex.A11.

5) Death Certificate of Dharmaraj (Copy) is marked as Ex.A.12.

6) 22.09.1950 dated Tamil Translated Copy in D.No.3423 Partion deed is marked as Ex.A13.

வா.சா.ஆ.1 ஆவணம் என் கணவருக்கு அவர் சித்தி எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் ஆகும். மேற்சொன்ன ஆவணம் 15.03.2018 தேதி ஏற்படுத்தப்பட்ட ஆவணம் ஆகும். மேற்சொன்ன உயில் பத்திரம் எழுதும் போது என் அப்பாவும் மற்றொரு நபரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். தங்கம் சொல்லிக்கொடுத்து தான் மேற்சொன்ன உயில் பத்திரம் எழுதப்பட்டது. மேற்சொன்ன சாட்சி கையொப்பம் செய்த போது நானும் உடன் இருந்து என் அப்பா கையொப்பம் செய்ததை பார்த்தேன். என் அப்பா தற்போது இறந்து விட்டார். உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் அப்பா உடையது தான். மேற்சொன்ன உயில்படி கிடைத்த சொத்து மற்றும் பூர்வீக சொத்தை கிரைய மற்றும் செட்டில்மெண்ட ஆவணம் மூலம் என் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது.

(வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேயபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).